| | |
|---|---|
| மையம் : ________________ | பெயர்: ________________ |
| மேற்பார்வையாளர் | பதிவு எண்: ________________ |
| கையொப்பம்: ________________ | நாள் : ________________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**ஜூலை – ஆகஸ்ட் 2025**
**உகரம் (UM00)**

**நேரம்: 2 : 00 மணி நேரம்** **மதிப்பெண்: 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

**I. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (Read the following paragraph and answer each question given below in a sentence)**

**(5 x 1 = 5)**

கோடைக்காலம், கடும் வறட்சி நிலவியது. மாவீரன் அலெக்ஸாண்டர் தன் வீரர்களுடன் பயணம் செய்துகொண்டிருந்தார். அனைவரும் தாகத்தால் தவித்தனர். அப்போது, படைவீரர் ஒருவர் சிறிதளவு தண்ணீரை, தேடிக்கொண்டு வந்தார். அதனை அலெக்ஸாண்டரிடம் கொடுத்தார். அதற்கு அலெக்ஸாண்டர், "நீங்கள் என் உயிரைவிட மேலானவர்கள். நீங்கள் தாகத்தால் வருந்தும்போது நான் மட்டும் எப்படிக் குடிப்பேன்?" என்றார்.

உடனே, "எங்கள் பிள்ளைகளுக்காக" என்றார் ஒரு வீரர். "என்ன, உங்கள் பிள்ளைகளுக்காகவா?" என்றார் அலெக்ஸாண்டர். "ஆம் மன்னா! நீங்கள் நன்றாக இருந்தால் நாடு நன்றாக இருக்கும் அல்லவா?" என்றார் வீரர். அதைக்கேட்ட அலெக்ஸாண்டர் மனம் நெகிழ்ந்தார். "உங்களுக்கு உங்கள் அரசரின் உயிர் முக்கியம். எனக்கு என் வீரர்களாகிய உங்கள் உயிர் மிகமுக்கியம். நான் மட்டும் எப்படித் தண்ணீரைக் குடிப்பேன்!" என்று கூறித் தண்ணீரைக் குடிக்க மறுத்துவிட்டார்.

**வினாக்கள் :**

1. யார் தண்ணீரைத் தேடிக்கொண்டு வந்தார்?

________________________________________________

2.அலெக்ஸாண்டர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதற்குப் படைவீரர் கூறிய காரணம் என்ன?

Q-1

-----------------------------------------------------------------------

3.அலெக்ஸாண்டர், தண்ணீரை ஏன் குடிக்க மறுத்தார்?

-----------------------------------------------------------------------

4.அலெக்ஸாண்டரின் தலைமைப் பண்பு யாது?

-----------------------------------------------------------------------

5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

-----------------------------------------------------------------------

**II. கீழ்க்காணும் விளம்பரத்திலுள்ள செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

***Read the messages in the advertisement given below and Answer the Following Questions.*** **(5 x 1 = 5)**




**வினாக்கள் :**

1.கண்காட்சி எதைப் பற்றியது?

-----------------------------------------------------------------------

2.கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?

-----------------------------------------------------------------------

3.கண்காட்சி நடைபெறும் இடம் எது?

-----------------------------------------------------------------------

4.கண்காட்சியில் எந்த நூற்றாண்டின் நாணயங்கள் இடம் பெறுகின்றன?

---------------------------------------------------------------------

5.விளம்பர அட்டையில் வழங்கப்பட்டிருக்கும் குறிப்பு என்ன?

---------------------------------------------------------------------

## பகுதி – ஆ
## இலக்கணப் பகுதி

**III. சேர்த்து எழுதப்பட்ட சொற்களில் புதியதாகத் தோன்றியுள்ள எழுத்தை எழுதுக.**
***Write the new letter that appears in the words that have been adde*** **(5 x 1 = 5)**

1. வாழை+ பழம் = வாழைப்பழம் _______________
2. பள்ளி + பருவம் = பள்ளிப்பருவம் __________________
3. இந்த + கை = இந்தக்கை ____________________
4. கை + தொழில் = கைத்தொழில் ________________
5. தமிழ் + சங்கம் = தமிழ்ச்சங்கம் _______________

**IV. கோடிட்ட இடத்தில் சரியான மரபுப் பெயரைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

***(Fill in the Blanks)*** **(5 x 1 = 5)**

**(அலறும், பிளிறும், அகவும், உறுமும், கூவும்)**

1. மயில் – _________________.
2. குயில் – _________________.
3. ஆந்தை – _________________.
4. யானை – _________________.
5. புலி – _________________.

**V. பின்வரும் தொடர்களைக் கூறியுள்ளபடி மாற்றி எழுதுக.**
***(Make the new sentence without changing the meaning.)*** **(2 x2.5 = 5)**

1. கமல் நேற்று வருவேன் என்றான். – வழாநிலையாக மாற்றுக.

---------------------------------------------------------------------

2. நான் வந்தேன் – வழுநிலையாக மாற்றுக.

---------------------------------------------------------------------

## பகுதி – இ
## படிப்போம் பகுதி

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு சொல் / ஒரு தொடரில் விடையளிக்கவும்.**
***(Answer all questions in a word / line)*** **(5 x 1 = 5)**

1. சிலம்பு என்பதற்கான பொருள் யாது?

   ________________________________________________

2. தொழில் கண்காட்சி என்றால் என்ன?

   ________________________________________________

3. துரோணாச்சார்யா விருது யாருக்கு வழங்கப்படுகிறது?

   ________________________________________________

4. மூலிகைகளின் அரசி எது?

   ________________________________________________

5. மார்ட்டின் லூதர்கிங் எந்த வழியில் போராடினார்?

   ________________________________________________

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் இரண்டனுக்கு மட்டும்.**
***(Answer the following any two)*** **(2 x 5 = 10)**

1. ஏற்றுமதி, இறக்குமதி – விளக்கம் கூறுக.
2. மயிங்கா நூலகத்தின் சிறப்புகள் யாவை?
3. உறைகிணறுகள் ஏன் கட்டப்படுகின்றன?
4. ஐம்பொறிகள் யாவை?
5. சாக்ரடீஸ் நோக்கம் என்ன?

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

Q-1

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

## பகுதி – ஈ
## செய்யுள் பகுதி

**VIII. கீழ்க்காணும் திருக்குறளில் உள்ள விடுபட்ட சொல்லை நிரப்புக.**
***(Fill in the Blanks)*** **(5 x 1 = 5)**

1. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத்து ஊறும் ___________.

2. ஒருமைக்கண் தான் கற்றகல்வி ____________
   எழுமையும் ஏமாப் புடைத்து.

3. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
   இருள்தீர எண்ணிச் ____________.

4. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
   அவ்வது உறைவது ____________.

5. இயற்றலும் ____________ காத்தலும் காத்த
   வகுத்தலும் வல்ல தரசு.

**IX. கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்க.**
***(Answer any two questions.)*** **(2 x 5 = 10)**

1. எடுத்துக்கொண்ட செயலை முடிப்பதில் கவனம் கொண்டவர்கள் எவற்றையெல்லாம் கவனிக்கமாட்டார்கள் என்று குமரகுருபரர் கூறுகிறார்?
2. உயிரைப் பாதுகாக்க திருமூலர் கூறும் சிந்தனைகள் யாவை?
3. எப்படிப்பட்டவர்கள் துன்புற்று வாழ்வதில்லை என்று நாலடியார் கூறுகிறது?

4. கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு பற்றி மூதுரை கூறுவது யாது?
5. இழிவு, உயர்வு குறித்து புறநானூறு பாடல் பதிவு செய்துள்ளதை எழுதுக.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி – உ
## மொழிபெயர்ப்போம் பகுதி

**X. மொழிபெயர்க்க *Translate.*** **(5 x 1 = 5)**

**அ) கீழ்க்காணும் தொடர்களைத் தமிழில் மொழிபெயர்க்க.**

*Tamil language is spoken in many countries.*

____________________________________________________________

**ஆ)கீழ்க்காணும் தொடர்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.**

தமிழர்கள், அறிவியல் சிந்தனை உடையவர்கள். தமிழ் இலக்கியங்கள், இதனை உறுதி செய்கின்றன. பிற்காலக் கண்டுபிடிப்புகளுக்கு அவை முன்னோடியாய் விளங்கின.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

## பகுதி – ஊ
## படைப்பாற்றல் பகுதி

**XI. கீழ்க்காணும் சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களாக எழுதுக.**
***(Form meaningful sentences using the following words)*** **(2 x 2.5 = 5)**

1. விண்கலம்

________________________________________________________________.

2. சிலைகள்

________________________________________________________________.

**XII. கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடல், விடுகதை, படக்கதை, ஆகிய தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிக்கு ஐந்து தொடர்களில் எழுதுக.** **(1x 10 = 10)**
***(Write five lines on any one of the following topics: song, riddle, picture story)***

**1. பின்வரும் பாடலைப் படித்துத் தொடர்ந்து எழுதுக.**

பூ பூ என்னபூ?
மல்லிகைப் பூ
என்னமல்லிகை?
காட்டு மல்லிகை
என்னகாடு?

________________________

________________________

________________________

________________________

________________________

***2.*** **கீழ்க்காணும் விடைகள் வருமாறு, ஐந்து விடுகதை உருவாக்குக.**
***Create five riddles with the following answers.***

1. உப்பு – விடுகதை ______________________________________ அது என்ன?
2. குதிரை – விடுகதை______________________________________ அது என்ன?
3. மழை – விடுகதை ______________________________________ அது என்ன?
4. சக்கரம் – விடுகதை ____________________________________ அது என்ன?
5. புகை – விடுகதை ______________________________________ அது என்ன?

Q-1

3. **கீழ்க்காணும் படங்களைக் கொண்டு சிறுகதை எழுதுக.**

***Write a short story using the following pictures.***



-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

**************